O.S. No: 100/2025
பெயர்: கோவிந்தராஜன்
**வா.சா. 1**
17-03-2026

**ஆரம்பிக்கப்பட்ட நேரம் : 11.19**

**குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கை முன்சிப் கோர்ட்டில் 2014ல் தாக்கல் செய்திருந்தேன். நான் தற்போது தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஏற்கனவே முன்சிப் கோர்ட்டில் தாக்கல் செய்யவில்லை. ஏற்கனவே நான் முன்சிப் கோர்ட்டில் தாக்கல் செய்யாததற்கு காரணம் தெரியவில்லை. இந்த வழக்கை நீட்டித்துக்கொண்டே போக வேண்டும் என்று இவ்வாறு காலதாமதமாக இந்த ஆவணங்களை தற்போது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. TS No 1073ன் மொத்த விஸ்தீரணம் தெரியும். அது 2 ஏர்ஸ் இருக்குமா என்றால் ஏர்ஸ் கணக்கில் தெரியாது. 5672 சதுர அடி. TS No 1073ல் ஏர்ஸ் கணக்கில் அதிக விஸ்தீரணம் உள்ளது என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.9, 10 இரண்டும் அடமான பத்திரங்கள் என்றால் ஆமாம். சுப்பிரமணியன் என்பவர் மேத்தா என்பருக்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரம். அந்த அடமான பத்திரம் எழுதிக்கொடுக்கும் காலத்தில் முன் தஸ்தாவேஜ்களை பார்க்கும் பழக்கம் கிடையாது என்றால் தெரியாது. வா.சா.ஆ9, 10 ஆவணங்களை யார் எழுதினார்கள் யார் சாட்சி போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த இரண்டு ஆவணங்களின் அசல் யாரிடம் எங்கு உள்ளது என்று தெரியாது. இந்த அசல் தஸ்தாவேஜ்களை வரவழைக்க எழுதி கொடுத்தவர் எழுதி வாங்கியவரை வரவழைப்பதற்கு சம்மன் அனுப்பினேனா என்றால் இல்லை. இதில் சாட்சியாக கையெழுத்து செய்தவர்களை விசாரிக்க போகிறேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிப்பேன். TS No 1073ற்கு வா.சா.ஆ.9 மற்றும் 10ல் கதவு எண் 33A என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. இந்த கதவிலக்கம் 33A விற்கு நகராட்சி வரி விதிப்பு உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.9, 10ல் நான்கெல்லையில் அழகிரிசாமி நாடார் வீட்டிற்கு மேற்கு, சுவாமிமலை

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/-J.Radhika,
Additional District Judge
Fast Track Court,
Kumbakonam.

ரோட்டிற்கு வடக்கு, மூமா அம்மாள் குடியிருப்பு வீட்டிற்கு தெற்கு, மூப்பக்கோவில் ரோட்டிற்கு கிழக்கு என்று உள்ளது என்றால் சரி. நான் போட்டிருக்கும் பிராதில் யானையடி ஐயனார் தெருவிற்கு கிழக்கு என்று போடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். பாத்திமா வீட்டிற்கும், வாய்க்காலுக்கும் தெற்கு என்று போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். நான் போட்டுள்ள ஆவணத்திற்கு பிராதில் கண்ட சொத்திற்கும் சரியல்ல என்றால் சரியல்ல. இந்த இரண்டு ஆவணங்களும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**முடிக்கப்பட்ட நேரம்: 11.31**

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd/-J.Radhika,
Additional District Judge
Fast Track Court,
Kumbakonam.